முரசொலி

வார இதழ் மு. கருணாநிதி

முரசு 3 | 7-12-56 வெள்ளி | ஒலி 36

ஆசிய எழுச்சியின் சின்னமே! சூ என் லாய் அவர்களே! தென்னகத்து மாந்தர் சார்பாக உமக்கு நல்வரவு கூறுகிறோம்! வருக! வாழ்க!

வறுமையைப் புகுத்தாதீர்! வாழ்வைப் பொசுக்காதீர்!

விசைத் தறியைத் திணிக்கப் போகிறார்களாம்; "வேண்டாம்! வேண்டாம்!!" என்று கூறுகிற நெசவாளித் தோழர்கள்மீது!

இப்போது ஓரளவுக்காவது பொங்கி வழிகிறது, அமுது அங்கே! அதனால் அந்த இடத்துக்கு வறுமையை வலுக் கட்டாயமாக நுழைக்கப் போகிறார்களாம்!

அரை வயிற்றுக்காவது கஞ்சி அருந்தி, கூழ் குடித்து, குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்! இதைக் கண்டு பொறுக்க மாட்டாதவர்கள் அவர்களைப் பொட்டுப்பூச்சிகளாய்; புன்மைத் தேரைகளாய் மாற்றுவதற்குத் திட்டமிட்டு விட்டார்களாம்!

ஆமாம்; விசைத் தறி வருகிறது, இங்கே!

அல்ல; அல்ல; அழைத்து வரப்படுகிறது!

விருப்பத்திற்கு மாறாக வற்புறுத்தப்படுகிறது!

நெசவுத் தொழிலாளர்களின் கழுத்திலே மாபெரும் பாரமாய் கட்டி விடப்படுகிறது!

விசைத்தறி என்ன, வறுமையின் சின்னமா?

ஏழ்மைக்குப் பாக்கு வைத்து அழைத்திடும் பண்பு கொண்டதா?

தரித்திரம் அதன் உடன் பிறப்பா? விசைத்தறி வந்ததும் அதுவும் அழைப்பில்லாமலேயே நுழைந்துவிடுமா?

—இந்தக் கேள்விகள் தோன்றலாம்!

இவைகளுக்கு இந்த நாட்டு அமைச்சர்கள் தெளிவான பதில் கண்டிருந்தால்; அல்லது அந்த வகைக்கான முயற்சிகளைச் செய்திருந்தால் இப்போது ஏற்படவிருக்கும் அபாயமே ஏற்பட்டிருக்காது!

உண்மையில் விசைத்தறியினால் நன்மைகள் உண்டு—ஒப்புக்கொள்கிறோம்!

ஆனால் அது இந்த நாட்டிலே திணிக்கப்படும் நிலைமை என்ன?

எல்லா நெசவாளத் தோழர்களுக்கும் வேலை கிடைக்கிறதா, இந்த நாளில்?

அல்லது நெசவாளித் தொழிலாளர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதா? அன்றி அவர்களது தயாரிப்புகளுக்கு அவர்களால் உடனே பூர்த்திசெய்ய முடியாத அளவு தேவைகள் தான் பெருகி விட்டனவா?

—இவைகள் எதுவுமே இல்லை.

நெசவுத் தொழிலாளர்கள் அனைவருக்கும் இன்னும் பூரணமாக வேலை—அல்லது சரியான கூலி கிடைக்கவில்லை.

அல்லது தொழிலாளர்கள் பஞ்சம் ஏற்பட்டுவிடவில்லை, இயந்திரங்களைப் பெருக்க வேண்டுமென்பதற்கு!

அல்லது கைத்தறிப் பொருள்களுக்கு இந்த நாட்டிலோ; அல்லது வெளி நாட்டிலோ அதிகப்படியான தேவைகள் ஏற்படவுமில்லை, அதைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் நெசவாளிகள் துண்டாடித் தவிக்கவுமில்லை!

—இந்த நிலையில்தான் விசைத் தறியைத் திணிக்கப் போகின்றனர்!

இயந்திரத்தின் உதவி எப்போது தேவைப்படுகிறது?

அந்த வேலையைச் செய்து முடிக்க போதுமான உழைப்பாளிகள் இல்லாதபோது!

அல்லது மார்க்கெட்டிலே ஏற்பட்டிருக்கும் தேவைக்குத் தகுந்தாற்போல் பொருள்களை கைத்தொழிலாளர்களைக் கொண்டு விநியோகிக்க முடியாதபோது!

இது போன்ற சமயங்களிலேதான் மனிதன் இயந்திரத்தை நாடுகிறான்!

இப்போது விசைத்தறி வேண்டுமென்று ஊளையிடுகிறார்களே இந்நாட்டில்! அவர்களே கூறட்டும்; விசைத்தறியைப் புகுத்துவதற்கான அவசியம் என்ன வந்துவிட்டது, இந்த நாட்டில்?

இருக்கின்ற நெசவாளிகளுக்கே சரியான முறையில் வேலை கிடைக்கவில்லை!

அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கும் ஒரே யடியான தேவை இப்போது திடீரென்று தோன்றி விடவில்லை!

—நிலைமை இப்படியிருக்க இப்போது விசைத் தறியைப் புகுத்தினால் என்ன ஏற்படும்?

வேலையில்லாத் திண்டாட்டம்!

எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம்!

ஆமாம்! தெருவிலே திருவோட்டுடன் திக்கற்ற நெசவாளர் கூட்டம் முன்புபோல் பவனி வரும்!

வேலையில்லை; உணவில்லை; அதனால் இந்த வேலை செய்தோம் என்று கடிதம் எழுதிவிட்டு குடும்பம் குடும்பமாய் நெசவாளிகள் ஆற்றிலோ; கிணற்றிலோ விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வர்!

பட்டினிப் பட்டாளமாகத் தெருத் தெருவாகப் பவனி வருவர்!

பராரிகள் தொகை பெருகும்!

—எப்படி என்று கேட்கிறீர்களா?

பலர் செய்யும் வேலையை ஒரு விசைத்தறி செய்யும்போது இப்படி ஒரு மோசமான—விரும்பத்தகாத சூழ்நிலைகள்தான் கட்டாயம் உருவாக முடியும்!

ஆயிரக் கணக்கான நெசவாளிகளின் வாழ்விலே விஷத்தை வீசி விட்டு இந்த நாட்டிலே விசைத்தறியைப் புகுத்துவதிலே என்ன பொருள் இருக்க முடியும்?

அமைதி கொஞ்சும் அவர்கள் இல்லத்திலே இடியைப் போட்டு விட்டு விசைகொண்ட தறியைப் பூட்டுவதால் என்ன லாபம் வந்துவிட முடியும்?

—இருந்தும் மனித உணர்வு சிறிதுமின்றி; இரக்கத்துக்குப் பிரியா விடை கொடுத்துவிட்டு இப்போது நெசவாளர் வீட்டிலே நஞ்சைத் தெளிக்க முன் வந்திருக்கின்றனர், ஆட்சியாளர்கள்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் கைத் தறி ஆடைகளுக்கு அதிகமான தேவை நாட்டிலே உருவாகிவிடுமாம்; அதை விசைத் தறி நுழைப்பதின் மூலம் சரி செய்து விடலாமாம்!

—ஆட்சியாளர் கூறுகின்றனர், இப்படி!

நாளை உனக்குப் பலாப்பழம் தருகிறேன்; இன்று பட்டினி கிட!

❋ தொடர்ச்சி 10-ம் பக்கம்

தோழர்காள்!

150 இடங்களிலா போட்டி? -ஏதய்யா இதுகளிடம் பணம்?

இறுமாந்து கேட்கின்றனர் காங்கிரஸ் கட்சியினர்!

இதோ எங்கள் காணிக்கை!

அஞ்சற்க! ஆயாசம் கொள்ளற்க!

என்று

கே. ஆர். இராமசாமி

எம். ஜி. ராமச்சந்திரன்

எஸ். எஸ். இராஜேந்திரன்

டி. வி. நாராயணசாமி

ஆகியோர்

கலை விருந்து அளித்திட முன் வந்துள்ளனர்!

டிசம்பர் 9 — எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

மாற்றார் மருள! உற்றார் உள்ளம் பூரிக்க! கழகம் களிப்புற!

கலை நிகழ்ச்சி வெற்றி பெறச் செய்வீர்!

டிசம்பர் 9-ல் பெறும் வெற்றி

தேர்தல் வெற்றிக்கு முன்னறிவிப்பு!

மகத்தான நிகழ்ச்சி!

மறவாதீர்! டிசம்பர்-9!

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

சென்னை 7-12-56 வெள்ளி

குன்தேவியா வேண்டாம்!

"ஆபாசத்துக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு சாப்பிடாதே!" என்றானும் சுகாதாரத்திலே அதிகப்பற்று வைத்த நண்பனொருவன்!

அதற்கு அவன் சொன்னானும், "நான் ஆபாசத்தைத் தொட்டுக் கொண்டுதான் சாப்பிடுவேன். நீ யார் கேட்பதற்கு?"—என்று!

—இந்த இழிநகை நிலைமையிலேதான் இந்த மாநிலத்து அமைச்சர்கள் மக்கள்குரலுக்கு மதிப்பு வைக்காமல், மமதையும் மடமையும் கலந்த தங்களது மனப்போக்கிற்குச் சுதந்தரம் கொடுத்து, அந்த வழியில் ஆட்சித் தேரை ஆபத்தும், அபாயமும், ஆபாசமும் நிறைந்த பாதை வழியே ஓட்டிச் செல்கின்றனர்.

அமைச்சரே; அமைச்சரே! அந்தப் பாதையிலே ஆபாசம்! அதோ உங்கள் மீதும் ஆபாசம்!

—இப்படி அறிவுறுத்துகிறோம் நாம், இந்த நாட்டிலே மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கப்பட்டு, நல்ல ஜனநாயகப் பண்பாடுகளுக்கு வித்திடப்பட வேண்டுமே என்ற நல்லெண்ணத்தால்!

ஆனால் ஆட்சி பீடத்தில் இருக்கும் 'அகம் கொண்டவை'களோ; அதில் விழுந்துதான் புரளுவோம்; நீங்கள் யார் கேட்பதற்கு?—என்கிற பாணியிலே பேசுகின்றனர்!

இந்த முறையிலேதான் சென்ற கிழமை சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்!

சென்னைக்கு ஏன் தமிழ்நாடு என்று பெயர் சூட்டிடத் தயங்குகிறீர்கள்?-இதய தாகம் இப்படிக் கேள்வி வடிவு கொண்டிருக்கிறது.

அதற்கு அமைச்சர் இவ்வாறு பதில் கூறியிருக்கிறார்:

"சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைப்பது எங்கள் கையில்தான் இருக்கிறது. இருந்தாலும் நாங்கள் அப்படிப் பெயர் வைக்க மாட்டோம்."

—கடலூரில் சுப்ரமணியனாருடைய பேச்சு இது!

"எங்கள் கையில்தான் இருக்கிறது; இருந்தாலும் அப்படிச் செய்ய மாட்டோம். சென்னை என்னும் தேவையற்ற பெயரைக் களைய மாட்டோம்."

"அது ஆபாசமென்று தெரிகிறது; முடைநாற்றத்தால் உணர முடிகிறது. இருந்தாலும் நாங்கள் அதை வீசி எறிந்து விட்டு, கைகளைச் சுத்தமாகக் கழுவிக் கொண்டு தூய்மையின் வழி ஒழுக மாட்டோம்!"

—இந்த இரண்டுவித வாசகங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

கடைந்தெடுத்த ஆணவமும்; முதல்தரமான அறியாமையும்தான் இவை இரண்டிலும் தலைகாட்டி நிற்பதை உணர்கிறோம்!

தாயை அம்மா என்று கூப்பிட மறுப்பதைப் போல; தந்தையை அப்பா என்று அழைக்க மறுப்பதைப் போல சென்னையைத் தமிழ்நாடு என்று கூப்பிட மறுக்கின்றனர், இந்தக் குறைமதியாளர்கள்!

—இவர்களுடையக் குறைமதியும்; கறை படிந்த அறிவும் எந்த அளவுக்குத் தமிழக மாந்தருக்குத் துரோகமும் தீங்கும் செய்கின்றன என்பதற்கு இதுமட்டுமல்ல; அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலும் சான்றாக இருந்து; அவர்களுடைய சாக்கடை நிகர் செயல்களுக்கு மக்கள் மன்றத்திலே, அவர்களை 'ஆபத்து நிறைந்தவர்கள்' என்பதையும் உணர்த்திக் கொண்டுதான் இருக்கின்றன!

அதற்கு இன்னொரு சமீபத்திய உதாரணம்தான், இலங்கைக்கு ஒரு வட இந்தியத் தூதுவரை நியமித்திருக்கும் செயலாகும்!

ஆமாம்; தமிழ்ப்பெரு மக்களே அதிகமாக வாழும் இலங்கைத் தீவிற்கு இந்திய அரசின் சார்பாக எ. திலஷா குன்தேவியா என்பவர் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்!

தமிழ் மொழி தெரியாதவர்; தமிழர் பண்பாட்டினை உணர முடியாதவர்; தமிழர்களைத் தம் எதிரிகள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் 'ஜாதியினர்' ஆம்; அந்த வடநாட்டுக்காரர்தான் இந்தியர்கள் என்ற பட்டியலின் கீழ்த் தமிழர்களே அதிகம் வாழும் ஈழத்து நாட்டிற்குத் குன்தேவியா என்ற வடநாட்டுக்காரர் அனுப்பப்படுகிறார்!

அநியாயமாகத் துரத்தியடிக்கப் படுகின்றனர், அங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள்!

ஆதரவற்ற நிலையிலே அவதிப்படுகின்றனர்!

தலைமுறை தலை முறையாய் அந்த மண்ணிலே பிறந்து; அந்த மண்ணிலேயே வாழ்ந்து வருபவர்கள்; ஒரு முறை கூடத் தமிழகத்தைத் தங்கள் கண்ணால் பார்க்காதவர்கள் பலர்!

—இவர்களுக்குக்கூட அங்கே அநியாயம் இழைக்கப்படுகிறது!

தமிழர்களாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால் ஆயிரமாயிரவர் அங்கிருந்து இங்கே அகதிகளாய் வரவேண்டிய அபாயகரமான நிலைமை உருவாகியிருக்கிறது!

நம்மோடு பிறந்தவர்கள்—ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள்—இவர்களுக்குச் சரியான நீதி பெற்றுத் தந்திட முடியவில்லை, இந்த மாநிலத்து அமைச்சர்களால்!

அந்தக் கொடுமைக் செல்லாம் சிகரம் வைப்பதுபோல; இந்தத் தடவை பண்டிதர் அரசாங்கம் திலஷா குன் தேவியாவை சிங்களத்தின் தூதுவராக நியமித்தபோது காமராசரும்; அவரது சீடகோடிகளும் சிந்தையை அடக்கிச் சும்மாயிருந்து விட்டார்கள்!

"பண்டிதரே! எம்போன்ற ஆட்டுமந்தைகளை நடத்திச் செல்லும் ஆபத்பாந்தவரே! எமக்குக் கொஞ்சமாவது தன்மான உணர்ச்சி இருக்கிறது. அதோ; எங்கள் கூடப் பிறந்தவர்கள் — அண்ணன், தம்பி, அக்காள், தங்கை—கடல கடந்த நாட்டிலே அவதியை உடமையாக்கிக் கொண்டு, தத்தளிக்கிறார்கள்! அங்கே ஒரு தமிழனை—தமிழ் நாட்டுக்காரனை—தமிழர்களின் இதயத் துடிப்பை உணர்ந்து கொள்ள முடிந்தவனைத் தூதுவனாக நியமனம் செய்யுங்கள்!

ஒரு தமிழனால்தான் இன்னொரு தமிழன் படும் அவதியை அதி விரைவில் உணர்ந்து கொள்ள முடியும்! இதற்கு ஆவன செய்யுங்கள்; ஆயிரமாயிரவரின் நல் வாழ்வுக்கு அடிகோலுங்கள்!"

—இப்படி முழக்கமிட்டிருக்க வேண்டும், பச்சைத் தமிழர் என்ற படோடோப வார்த்தைக்கு உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் காமராசர்!

பாவம்; பண்டிதர் அரசாங்கம் இந்த மாபெரும் குறைபாட்டுக்கு இடமில்லாமலேயே காரியமாற்ற முடியவில்லை.

—காரணம் அவர்கள் வட நாட்டார்; நமக்கு முற்றிலும் வேறு நாட்டார்!

காமராசரும் நாம் மேற்கூறிய வகையிலே பண்டிதர் ஆட்சியைத் தட்டிக் கேட்டிட முடியவில்லை.

--காரணம் அவரோ தமிழனென்ற உணர்ச்சி பெற்றிராத ஒரு மரக் கட்டை!

அய்யோ, கடல் கடந்த தமிழர்களே! உங்கள் கதி இப்படியா ஆகவேண்டும்? நீங்கள் பெற்ற பேறு ஒரு தமிழனை நீங்கள் பெருவாரியாக வாழும் இலங்கை நாட்டிற்குத் தூதுவனாகப் பெறுவதில் இல்லை. ஒரு தமிழனை; தமிழன் என்று தலை நிமிர்ந்து கூறிக் கொள்பவனை, அந்த உணர்ச்சி உதய சூரியன் போல உள்ளத்தில் கொழுந்துவிட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஒரு உண்மைத் தமிழனை—இந்த மாநிலத்து அமைச்சரவையிலே ஏற்றி வைப்பதுதான்!

அப்போதுதான் உங்கள் நைந்துபோன வாழ்விலே வளம் பொங்கும்! கண்ணீர்க் குளம் மறையும்! இந்த நிலம் உள்ளமட்டும் உங்கள் இனமும் வாழமுடியும்!

சீனத்துக்கு சிகப்பு வர்ணம் பூசிய செம்மல்;
சகத்திற்கெல்லாம் புதுப்பாடம் தந்த பரிதி;
சூ என் லாய் அவர்களுக்கு
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வாசித்தளித்த
வரவேற்பிதழ்

மாசேதுங் ஏற்றி வைத்த மணி விளக்கே! மாசற்ற ஜோதியே!

நீர் பாரதம் வருகிறீர் என்று கேள்விப்பட்டதுமே எங்கள் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கப்பெற்றோம். **ஆமாம்;** காங்கிரஸ்காரர்களாக இருக்கும் எங்களுக்கும், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும்கூட இதனால் மெத்தமகிழ்ச்சி! எப்படி யென்று கேட்கிறீர்களா? இதோ; விளக்குகிறோம்!

இந்த நாட்டிலே தேர்தல் வருகிறது; ஆமாம் வந்து கொண்டே இருக்கிறது.

மாநிலமெங்கும் எங்களுக்கு ஒரேயடியாகக் கெட்ட பெயர்—தாய் மொழிமேல் பற்று கொண்டவர்கள் அத்தனைபேரும் எங்களைத் தடிகொண்டு தாக்க வருகின்றனர்.

—இந்த நேரத்திலே நீங்கள் வந்திருக்கிறீர்கள்! பொது மக்கள் முன்னிலையிலே பவனிவர நீங்கள் ஒரு மகத்தான சந்தர்ப்பத்தை சிருஷ்டித்துத் தந்திருக்கிறீர்கள் எங்களுக்கு!

உங்களோடு எங்கள் தலைவர்கள் எடுத்துக் கொண்ட படங்கள் பத்திரிகையிலெல்லாம் வெளிவரும். அந்தப் பொதுக் கூட்டங்களிலே அமைச்சர்கள் ஒவ்வொருவரும் பங்கேற்றுக் கொள்வர். பயந்து நடுங்கி ஒளிந்து கொண்டிருந்த எங்களை மக்கள் மன்றத்துக்கு முன்னே தலை காட்டச் செய்த உங்களுக்கு நாங்கள் எந்த வகையில்தான் கைம்மாறு செய்யப் போகிறோம்! அதனால் தலைவரே, எங்கள் உளங்கனிந்த நன்றியை ஏற்றுக் கொள்ளும்படி உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்!

சியாங்கே ஷேக்கின் சிம்ம சொப்பனமே! சீனத்து மாந்தரின் சிந்தை கவர்ந்தவரே!

உங்களை வரவேற்பதில் இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளும் அதிக உற்சாகம் காட்டுகின்றனர்.

புல்கானின் குருஷேவ் வரவால் வற்றிவிட்டது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு ஊற்று!

மேலும் ஹங்கேரியிலே இப்போது நடந்துவரும் "கலாட்டாக்களை" கண்மூடித்தனமாய் ஆதரிப்பது காரணமாக பாவம்; அவர்கள் சித்தம் பேதலித்துத் தவிக்கின்றனர்.

—இந்தச் சோகமயமான நேரத்தில் நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

ஏதோ; ஜனசக்தி அலுவலகத்திற்குத்தான் நீங்கள் வருவது போல நினைத்துக் கொண்டு; நீங்கள் இந்திய மக்களது விருந்தாளி என்பதை மறந்துவிட்டு; அவர்கள் பல வண்ணச் சுவரொட்டிகளைச் சென்னை முழுவதிலும் ஒட்டி ஒய்யாரத்துடன் உங்களை வரவேற்கின்றனர்!

—ஆகவே எங்கள் இரு கட்சிகளது 'புனர் ஜென்ம'த்திற்கு வித்தூன்றிய வித்தகரே! உங்களை வருக! வருக!!—என்று இரு கை குவித்து வரவேற்கிறோம்!

சுரண்டல் இயந்திரத்தைச் சுக்கு நூறாக்க வந்த 'சுத்தமாந்தடியே'! காலனி ஆதிக்கத்துக்குக் காலனாக வந்தவனே!

இந்தத் தென்னாட்டிலே ஒரு வகுப்புவாத இயக்கம் இருக்கிறது. அதன் பெயர் தி. மு. கழகம்! அதை நம்பாதீர்கள்!

அவர்கள் அத்தனை பேரும் வெள்ளைக்காரனுக்கு வால் பிடித்தவர்கள்!

—இப்படி நாங்கள் அவர்களைக் குற்றம் சாட்டினால் அவர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? நாங்கள்தான் வெள்ளைக்காரனுக்குப் பராக்கு' கூறியவர்கள் என்று பதிலடி தருகிறார்கள் ஆதாரத்தோடு! உதாரணமாக எங்களுக்கு பாரதி என்ற பெயரிலே ஒரு தேசியப் புலவன் கிடைத்திருக்கிறான்!

அவன் செத்தவன் சும்மா செத்திருக்கக் கூடாதோ? முன்பு டியூக் ஆப் வேல்ஸ் வந்த போது **"வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு!"** என்ற பெயரில் அந்த வெள்ளைக்காரத் துரைக்கு நல்ல ஆசிரியப் பாவினால் பராக்கு கூறிவிட்டுப் போயிருக்கிறான்!

வருக செல்வ! வாழ்கமன் நீயே!
வடமேற் றிசைக்கண் மாபெருந் தொலையினோர்
பொற்சிறு தீவகப் புரவலன் பயந்த
நற்றவப் புதல்வ! நல்வரவுனதே!
மேதக நீயும்நின் காதலங் கிளியும்
என்றனைக் காணுமா றித்தனை காதம்
வந்தனிர்! வாழ்திர்! என் மனம்மகிழ்ந் ததுவே
செல்வகேள்! என்னரும் சேய்களை நின்னுடை
முன்னோர் ஆட்சி தொடங்கு றாஉம் முன்னர்
நெஞ்செலாம் புண்ணாய் நின்றனன் யாஅன்,
ஆயிர வருடம் அன்பிலா அன்னியர்
ஆட்சியின் விளைந்த அல்லல்கள் எண்ணில.
போனதை எண்ணிப் புலம்பியிங் கென்பயன்?
மற்றுன் நாட்டினோர் வந்ததன் பின்னர்,
அகத்தினில் சிலபுண் ஆறுதல் எய்தின. ....

நல்குர வாதி நவமாம் தொல்லைகள்
ஆயிரம் எனைவந் தடைந்துள நுமரால்
எனினுமிங் கிவையெலாம் இறையவன் அருளால்
நீங்குவ வன்றி நிலைப்பன வல்ல.
நோயெலாந் தவிர்ப்பான் நுமரே எனக்கு
மருத்துவராக வந்தனர் என்பதூஉம்
பொய்யிலை. ஆதலிற் புகழ்பெறும் ஆங்கில
நாட்டின ரென்றும் நலமுற வாழ்கவே!
என்னருஞ் சேய்களும் இவரும்நட் பெய்தி
இருபான் மையர்கும் இன்னலொன் றின்றி
ஒருவரை யொருவர் ஒறுத்திட லிலாது,
செவ்விதின் வாழ்க! அச் சீர்மிகு சாதியின்
இறைவனும் முந்தை இன்பொடு வாழ்க!
வாழ்க நீ! வாழ்கநின் மனமெனும் இனிய
வேரிமென் மலர்வாழ் மேரிநல் லன்னம்!

—கேட்டீரா, இந்தக் கவிதையை! இது பாரதியார் கவிதைத் தொகுப்பில் "சான்றோர்" என்ற தலைப்பின் கீழ் இருக்கிறது.

—இதையெல்லாம் வைத்துக் கொண்டு நாங்கள் தான் வெள்ளைக்காரன் 'பூட்ஸ் நக்கிகள்' என்று முடிவு கட்டிவிடாதீர்கள்!

—அந்த தி. மு. க.க்கள் கொடும் பாவிகள்! நீங்கள் முன் சிறையில் செய்து வந்தபணியினை அவர்கள் இங்கே செய்து வருகின்றனர்.

எனவே அவர்களை ஒழித்துக் கட்டுவதற்கு நீங்கள் ஆயுத உதவியும். படை உதவியும் அனுப்பி எங்களைக் காப்பாற்ற வேண்டும்; அதனால் அய்யனே வருக! மெய்யனே வருக!

இப்படிக்கு,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

[கற்பனை]

காதலுக்குக் கண்ணில்லை

• தொடர் நாடகம் •

தில்லை. வில்லாளன் எம். ஏ.,

[தான் அரசனின் மெய்காப்பாளன் என்பதை மறந்து—பொன்மேனியால் அரசி என்பதையும் மறந்து - அவள் மையலில் மயங்கிக்கிடக்கிறான் ஆளவந்தான்.]

ஆள: கண்ணே, துடிக்கும் உன் இதயத்தை என் நெஞ்சோடு நெருக்கி, துடிப்படக்கு. ஆம், இந்த நேரத்தில் இன்பலோக யாத்திரைக்கு துவக்க விழா நடத்துவோம்.

பொ: காதலா, என் அருகில் இப்படி அமருங்கள். என்னை விடக் கொஞ்சம் கீழே உட்காருங்கள். உங்கள் கூந்தலை, என் விரல்கள் கோதட்டும். என் முத்தத்தை தாங்கத் துடிக்கும் அந்த முகத்திலே, கணத்திற்கு கணம் தோன்றி மறையும் உணர்ச்சிக் குவியலை நான் காண்கிறேன். பல நாள் பூட்டிக்கிடந்த ஒரு அறையைத் திடீரென ஒரு நாள் திறந்தால் புழுதியும், தூசியும் கிடக்கும். கதிரவன் ஒளியில் அவை எப்படித் தெரியும்? காற்று வேகத்தில் எப்படிப் பறக்கும்? கண்ணாளா, என் இதயமும் அப்படிப்பட்ட அறையாகத்தான் இருந்தது தாங்கள் தான் காதலெனும் கதிரவன் ஒளியை அதனுள் புகுத்தியுள்ளீர்கள். காதல்தான் வாழ்க்கை எனும் புத்தகத்தில், உயிரான அத்தியாயம் என்பது சரிதானே!

ஆள: காதலின்றேல், செதுக்கப்படாத கருங்கல்லாகவே மனிதன் இருக்கிறான். காதலின்றேல் வாழ்வு, ஊதமுடியாத இசைக் கருவியாகவே போய்விடுகிறது.

பொ: ஆனால், காதலெனும் இசைவாணன், ஊதமுடியாத வாத்தியமானாலும், அதிலும் இசையைக் கிளப்பி விடுகிறான். காதல் எத்தகையவர் வாழ்விலும் இன்பத்தை உண்டாக்கி விடுகிறது. இல்லையா?

ஆள: இன்பமே, பெண்கள் தான் இதனை உண்மையாக்கிக் காட்டுகிறார்கள். நான் பெண்களை திறமையான சித்திரக்காரர்கள் என நினைக்கிறேன். அவர்கள், கிழிந்த திரையிலும், சாதாரண வண்ணக் கலவைகள் மூலம், அழகான படங்களை எழுதி விடுகிறார்கள்! ஆமாம், எந்த வாழ்விலும், இன்பத்தை உண்டாக்கிக் காட்டுகிறார்கள்!

பொ: கண்ணாளா, நாம் இருவரும் ஏழைகளாகவே இருக்க விழைகிறேன். ஏழையர் இருவர் காதல்கொண்டால், செல்வம் நிறைந்தவர்கள்போல, வாழ்வில் மாறிவிடுகிறார்கள் — மகிழ்ச்சிக் கடலில் மிதக்கிறார்கள்.

ஆள: மீண்டும் ஒரு முறை சொல்! பவள வாய் திறந்து, பொன்மொழி உதிர்! பொன்னே...உம், நான் உங்களைக் காதலிக்கிறேன்—என்று சொல்.

பொ: (அவன் சட்டைக் கழுத்துப்பட்டியைப் பார்த்தபடி) இந்தப்பட்டி, உங்கள் கழுத்துக்கு எவ்வளவு அழகு செய்கிறது.

[பழிதீர்த்தான், அந்த அறையின் கதவோரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறான். ஆளவந்தான், பொன்மேனியாள் தரும் இன்ப போதையில் மயங்கி, இன்ப வார்த்தைகளை இறைத்தபடி யிருக்கிறான். பழிதீர்த்தானும், இந்தக் காதல் நாடகத்தை உற்று கவனித்துக் கொண்டேயிருக்கிறான்.]

ஆள: கண்ணே, என் வாழ்க்கைக் காவியமே! மீண்டும் ஒரு முறை கூறு, 'அன்பரே, நான் உங்களைக் காதலிக்கிறேன்' என்று.

பொ: (சட்டைப் பட்டியைப் பார்த்தபடி) நான் சிறியவளாக இருந்த நேரத்தில், அழகாபுரியில் — என் தாய் மாமன் இப்படி அணிந்திருந்ததாக நினைவு.

ஆள: கற்கண்டே, தித்திக்கும் செங்கரும்பே! அந்த இனிய மொழி புகலாமல் காலங் கடத்துகிறாயே! உம், சொல், என் செவியிலே தேன் மழை பொழி.........உம், காதலிக்கிறேன் கண்ணாளா...சொல்லேன், என் துடிக்கும் இதய ஆசைக்கு அணைபோடு.

பொ: (சிரித்தபடி) அவன் மன்னர்களிலேயே, மகத்தானவன்—அழகன்—ஆண்மையாளன்—ஆனாலும், தங்களை மிஞ்சியவன் அல்ல — என் அன்புக் காதலராகிய தாங்கள், அவனைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவர்.

[ஆர்வம் மிகுதியில், பொன்மேனியாள் இருகரத்தாலும் அவன் முகத்தைப் பிடித்து, தன் முகத்தின் பக்கம் திருப்புகிறாள்.]

ஆள: (தழ தழத்த குரலில்) பொன்னே!

பொ: பொன்னுக்கு ஒளிதரும் வைரமே! நான் என்றும் உங்களின் உடமை — நீங்கள் உடல்; நான் அதில் உலவிடும் உயிர்—இதில் சந்தேகமேன்?

[அவள் திரும்புகிறாள். திடுக்கிடுகிறாள். பழிதீர்த்தானின் உருவம் தெரிகிறது. பதறிப்

✻ 8-ம் பக்கம் பார்க்க



நாடகம்

[காட்சி: 11-தொடர்ச்சி]
[இடம்: தோட்டம்]

கறுப்பன்: கண்ணம்மா!......உன்னை வெறும் அழகி மட்டுமென்றே கருதினேன். நீ அறிவழகி என்பதையும் வெளிப்படுத்தி விட்டாய்.

கண்ணம்மா: நீங்கள் கருதுவது உண்மையானால் இது வரையில் நான் கூறியவை அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகி விடாதே!

கறு: நிச்சயமாக ஆகாது! நீ தான் என் அரசியல் குரு! இனிமேல் நீயே எனக்கு வாழ்க்கை வழிகாட்டி!...

கண்: இந்தப் பேச்சில் மாற்றமே ஏற்படாதே!

கறு: ஏற்படாது கண்ணம்மா! என் பொது வாழ்க்கையிலே ஏற்பட்ட தொய்வு இன்றோடு முடிவு பெறுகிறது.

இந்தக் கணம் முதல் மறுமலர்ச்சி பெற்ற உள்ளத்தோடும் புதிய உற்சாகத்தோடும் திராவிட நாட்டு விடுதலைக்காக உழைப்பேன்! தேசம் விடுதலை பெறாமல் இந்தத் தேகம் இருந்தொரு பயனுமில்லை என்ற நெஞ்சுறுதியோடு தி. மு. கழகத்தின் பாடி வீட்டில் ஒரு படை வீரனாக நின்று பணி புரிவேன்.

கண்: மன அமைதி ஏற்பட்டு விட்டதல்லவா, இப்போது?...

கறு: நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு அப்படித் தான்!

கண்: இனி அந்த அமைதி மருந்து தேவையில்லை அல்லவா?...

கறு: கடைசி கடைசி யென்று இந்தக் கதர் சட்டையோடு ஒரு 'நாலைந்து' சாப்பிட்டு விட்டு அதோடு நிறுத்தி விடுகிறேனே ......

கண்: பார்த்தீர்களா?...இது தான் உங்கள் உறுதியா?

கறு: இல்லை கண்ணம்மா, இல்லை! இனிமேல் அந்த விஷத்தினும் கொடிய மதுவை திரும்பியும் பார்க்கமாட்டேன்!........ அந்த மதுவினும் கொடிய காங்கிரஸ் கட்சியின்மீது இம்மி அனுதாபமும் வைக்கமாட்டேன்!......... ஆனால் ஒன்று கண்ணம்மா; காங்கிரசுக்காகப் படாத பாடுபட்ட விடுதலை வீரத் தலைவர்களாம் காந்தி—பகவத்சிங் — சுபாஷ் சந்திரபோஸ்—வ. உ. சிதம்பரனார்—குமரன் போன்ற தியாகிகளுக்கு நான் காட்டும் மரியாதையில் நீ குறுக்கிடக்கூடாது!

கண்: குறுக்கிடுவதா? உங்களோடு சேர்ந்து நானும் அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.....சாக்ரடீசுக்கும் ஆப்ரகாம் லிங்கனுக்கும் நான் மரியாதை காட்டவில்லையா; அது போலவே இதையும் நான் கருதுகிறேன்.

கறு: சரி கண்ணம்மா......நாம் இருவரும் உள்ளத்தளவில் ஒன்றுபட்டு விட்டோம்... இனிமேல் ஒரு முழக் கயிறு......

கண்: எதற்குக் கயிறு?

கறு: நான் உன் கழுத்தில் கட்ட வேண்டும்' நீ மறுத்தால் நானே என் கழுத்தில் கட்டிக் கொள்ள வேண்டும்.......அவ்வளவு தான்!...

கண்: அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்...... நான்தான் உங்களுக்குச் சொந்தமாகி விட்டேனே...இனி எதற்குக் கயிறு?...

கறு: கல்யாணம்.........வேண்டாமா?...

கண்: கல்யாணம் வேண்டும்—அதற்குக் கயிறு வேண்டாம்—மாலை போதுமென்கிறேன்.

கறு: ஓ.. சுயமரியாதைக் கல்யாணமா?

கண்: அப்படியும் சொல்லலாம்; பழந்தமிழர் மணமுறை என்றும் கூறலாம்!

கறு: பழந்தமிழர் மணமுறை யென்றால்...தாலி உண்டல்லவா?..புலியை வேட்டையாடி அதன் நகத்தையோ பல்லையோ கொண்டு வந்து காதலியின் கழுத்தில் கட்டி.........அவளை மனையாட்டியாகப் பெறுவார்களாமே; அக்காலத் தமிழ் வீரர்கள்!......

கண்: அந்தத் தாலி வீரத்தின் அடையாளம்! ... அப்படியிருந்தால் ஒத்துக் கொள்ளலாம்!...இந்தக் காலத்தில் பூனை குறுக்கே போனால் பயப்படுகிற மக்களைத்தான் பார்க்கிறோம்.. புலிநகம் யார் கொண்டு வரப் போகிறார்கள்? அப்படிக் கொண்டு வந்தாலும், அய்யோ, இந்த முரடனையா கட்டிக் கொள்வது என்று பெண் பயந்து ஓடுவாள்!...

கறு: (சிரித்துக் கொண்டே... அவளைத் தழுவியவாறு) கண்ணே!......பெறற்கரிய வாய்ப்பு பெற்றேன்!..உன்னைப் போன்ற அறிவும் பண்பும் வாய்ந்த அழகிகள் இந்த நாட்டு விடுதலை வீரர்களுக்கெல்லாம் துணைவியராகி அவர்களை மகிழ்விப்பார்களானால்.... ஆகா...அந்த வீரர்களின் வாழ்வு எவ்வளவு பொலிவோடு அமையும்!

கண்: அதிருக்கட்டும்; வந்ததும் சொன்னீர்களே; யாருடைய குடும்பத்திலோ குழப்பம் விளைவித்துவிட்டேன் என்று......யார் குடும்பத்தில்? என்ன குழப்பம்?

கறு: இல்லை கண்ணம்மா—என்மீதும் தவறில்லை; அந்தப் பெண்மணி மீதும் தவறில்லை—வீணாக அவள் கணவன் சந்தேகப்பட்டு விட்டான்.

கண்: என்ன— என்ன—? விபரமாகச் சொல்லுங்கள்!

கறு: ஆனை மூஞ்சிப்பிள்ளையை அடித்தேனே; உடனே அவர் ஆட்கள் என்னைத் துரத்தினார்கள். நான் ஓடிப் போய் ஒரு வீட்டில் ஒளிந்து கொண்டு கதவைத் தாள் போட்டுவிட்டேன். அது போலீஸ்கார பொன்னுரங்கம் வீடு......அவன் வீட்டில் இல்லை. அவன் மனைவி மட்டும் தூங்கிக் கொண்டிருந்தாள். அந்தச் சமயம் பொன்னுரங்கம் வந்து கதவைத் தட்டவே

டிசம்பர் 10-ம் நாள் கிடைக்கும்!

நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் ஏடு அலங்கார முகப்புடன்; அழகு எழுத்தோவியங்களுடன் வருகிறது..........

முத்தாரம்

★ மேயர்

★ ஒளி முத்தே!

★ குரு பத்தினி

—மூன்று பெருங் கதைகள் உங்களுக்கு விருந்தாக வருகின்றன!

முத்தாரம்

—இவையனைத்துடனும் மற்றும் வழக்கமான சிறப்புகளுடனும் மு. க. வின் சிறுகதையுடனும் வர இருக்கும் 'முத்தாரம்' அணிந்திட இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் சொல்லி வையுங்கள்.

பாவம்; ஏது மறியாத அவள் போய் கதவைத் திறந்தாள். வந்தவன் ஒளிந்திருக்கும் என்னைப் பார்த்து மனைவி மீது சந்தேகப்பட்டு விட்டான்—ஒரே குழப்பம் அந்த வீட்டில்! நான் ஓடி வந்துவிட்டேன்!...

கண்: நல்ல வேலை செய்தீர்கள்; நீங்கள் இருந்து அவனிடம் விபரம் சொல்லி சமாதானப்படுத்தக் கூடாதா?

கறு: சரியாப்போச்சு! விபரம் சொல்ல நின்றால் என் முதுகு விரிந்து விடும் போலிருந்தது; ஓட்டம் பிடித்துவிட்டேன்.

கண்: இரண்டு சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறீர்கள் ஆனை மூஞ்சிப் பிள்ளையை அடித்து...அவன் வேறு ஏதாவது உங்களை சிறையிலே பிடித்துப் போட வழி செய்யப் போகிறான். போலீஸ் பொன்னுரங்கத்தின் மனைவி உங்களால் வாழ்க்கை முழுவதும் துன்பம் அனுபவிக்கப் போகிறாள்.

கறு: இதற்கு என்ன செய்யலாம் கண்ணம்மா!...

கண்: ஆனை மூஞ்சிப் பிள்ளையின் கோபத்தைத் தணிக்க நீங்கள் உடனே எங்கப்பாவிடம் போய் தேர்தல் பிரச்சாரகராகச் சேர்ந்துவிடுங்கள்!

கறு: அதனால் எப்படி ஆனை மூஞ்சிப் பிள்ளையின் கோபம் தணியும்?

கண்: நீங்கள் அப்பாவிடம் சேர்ந்து விட வேண்டும். நானும் ஆனை மூஞ்சியைக் கல்யாணம் செய்து கொள்ள சம்மதம் தர வேண்டும். அப்படி சம்மதித்து விட்டால்...அப்பாவும் ஆனைமூஞ்சியும் நண்பர்களாகி விடுவார்கள்! நண்பரின் தேர்தல் பிரச்சாரகராகிய உங்களை ஆனை மூஞ்சிப் பிள்ளை சும்மா விட்டு விடுவார்!......

கறு: சே!...இதற்காக உன்னையும் என் கொள்கையையும் நான் இழக்க வேண்டுமா? முடியாது! முடியாது!

கண்: என்னையும் இழக்க வேண்டாம், லட்சியத்தையும் இழக்க வேண்டாம்!... நான் சொல்லுகிறபடி கேளுங்கள்...என் அப்பாவுக்கும் ஆனை மூஞ்சிப் பிள்ளைக்கும் சரியான பாடம் கற்பிக்கிறேன்.

கறு: சரி; பொன்னுரங்கம் வீட்டில் ஏற்பட்டுள்ள குழறலை எப்படித் தீர்த்து வைக்கப் போகிறாய்?

கண்: நீங்களே காலையில் மறுபடியும் பொன்னுரங்கம் வீட்டுக்குப் போங்கள்... இருவரிடமும் நிலைமையை விளக்குங்கள். அதிலும் பயன் ஏற்படாவிட்டால் பிறகு வேறுவழி செய்கிறேன் நான்...

கறு: எனக்குப் பயமாயிருக்கிறது, கண்ணம்மா! மீண்டும் அவனைப் பார்த்தால் ஏதாவது எக்கச்சக்கமாக நடந்துவிட்டால்?...

கண்: (சிறிது யோசிக்கிறாள்... யாரோ வருகிற ஒளி கேட்கிறது. அதைக் கவனித்து) யாரோ வருகிறார்கள்...... வாருங்கள், வேறு பக்கம் போவோம்......

கறு: நான் போய்விட்டு நாளைக்கு வருகிறேனே...

கண்: பொன்னுரங்கத்தை சமாதானப்படுத்த வழி சொல்லுகிறேன். வாருங்கள்—பிறகு போகலாம்.

[இருவரும் அதை விட்டு வேறிடம் போய் விடுகிறார்கள். பலவேஷமும் சமயோஜிதம் பிள்ளையும் வருகிறார்கள்.]

சம: பலவேஷம்! எங்கய்யா போயிருக்கும்?.....எனக்கு ஒண்ணுமே புரியலியே...

பல: அதான் எனக்கும் புரியலே'...ஒரு வேளை, அந்த ஆனைமூஞ்சிப் பிள்ளை...... ஆள் வச்சி தூக்கிட்டுப் போயிருப்பானோ?...

சம: என்னய்யா: கண்ணம்மா சின்னக் குழந்தையா ... தூக்கிட்டுப் போக!...

பல: எதுக்கும் போலீசிலே தகவல் கொடுத்து வைக்கிறது ரொம்ப நல்லதுங்க!...

சம: அதுவும் சரிதான்—இப்பவே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயி...தகவல் கொடுத்துவிட்டு வாரும்.

[இருவரும் அதை விட்டுச் செல்லுகிறார்கள்.]

(திரை விழுகிறது)

● தொடரும் ●

அறிவிப்பு

பிரபல ஓவியர்களான பாலு பிரதர்ஸ், அய்க்கன், மாதவன் - கைத் திறன்கொண்டு தயாரித்த "பொங்கல் வாழ்த்துக்கள்" விற்பனைக்குத் தயார்.

மாதிரி வேண்டுவோர் (15-டிசைன்கள் கொண்ட செட்) ரூ. 1. மணி ஆர்டர் செய்யவும்.

பகுத்தறிவுப் பண்ணை
115, வண்டிக்காரத் தெரு,
தஞ்சை.

அவர்வளர்ந்தார்-நாடு வளரவில்லை!

டலாய் லாமா
பஞ்சன் லாமா
சூ யென் லாய்
சிக்கிம் மன்னர்
நேபாளத்தின் முதலமைச்சர்

—இவர்கள் அத்தனை பேரும் இப்போது பாரதப் பெருங் கண்டத்திலிருக்கிறார்கள்!

ஏழையர் நாடு: வறுமையும் மிடிமையும் செறிந்த பூமி—இருந்தும் இந்த விருந்தாளிகளுக்குக் குறைச்சலில்லை!

சாப்பிடுவது கூழ்: கொப்பளிப்பது பன்னீர்—என்பார்கள்!

இங்கே உணவுக்குப் பரதவிக்கிறோம்; பட்டினி கோதுகளை அடைக்கிறது!

இருந்தும் இங்கே வெறெந்த நாடுகளிலும் இல்லாத விதத்திலே வெளிநாட்டுக்காரர்களை யெல்லாம் அழைத்து விருந்து வைத்து அனுப்புகிறார்கள்!

மேலே குறிப்பிட்டவர்கள் நமக்குப் பிடிக்காதவர்களல்ல; அவர்கள் உறவை நாம் குறை கூறவில்லை!

சூ யென் லாய் வந்திருக்கிறார்; இப்போது!

பார்க்கப் போனால் அவர் பிரதிநிதியாக இருக்கும் சீன மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் மிக மிக நெருங்கிய ஒற்றுமை உண்டு!

ஆமாம்; இன்று உலகத்திலேயே ஒரு நாட்டுக்காரன் சொந்த நாட்டிலே பிழைக்க வழியின்றி வெளிநாட்டிலே குடியேறி; கூலியாக உழைத்து; வயிறு வளர்க்கிறானென்றால் அவன் ஒன்று சீனக்காரனாக இருக்க வேண்டும் அல்லது தமிழ் நாட்டுக்காரனாகத்தான் இருந்து தீரவேண்டும்!

அமெரிக்க நாட்டான் வெளிநாடு ஒன்றில் குடியேறியிருந்தால் அவன் ஒரு ஆலை முதலாளியாகவோ, எண்ணெய் வியாபாரியாகவோதான் இருப்பான்!

ஆங்கிலேயன் வெளிநாடு சென்றால் அவன் ஒரு தொழில் நிபுணனாகத்தான் செல்வான்!

ஆனால் சீனனுக்கும் தமிழனுக்கும் நிலைமை அப்படியல்ல; அவர்கள்தான் இந்த உலகில் கூலியாகத் தாயகம் துறந்து செல்லும் "பாவத்தை"ப் புரிந்தவர்களாவார்கள்!

இதிலே சீனா இன்று விழிப்படைந்து விட்டது!

அத்தகைய நாட்டின் பிரதிநிதியை நாம் வரவேண்டாம் என்று சொல்வதற்கில்லை!

இருந்தும் ஏழையர் சீமைக்கு இவ்வளவு விருந்தாளிகள் தேவையா?

நியாய விலைக் கடைகளிலே அணிஅணியாய் மக்களைப் பார்த்துவிட்டு; இந்த நாட்டு அரசியல் கூடத்தில் அடுக்கடுககாய் வரும் விலந்தினரையும் பார்க்கும்போது இதுபோன்ற விருந்துபச்சாரங்கள்; அதனால் விளையும் வீண் செலவுகள் அவசியம்தானா என்ற கேள்விதான் எழுகிறது.

பண்டிதர் வெளி நாட்டு உறவிலே செலவிடும் அக்கரையில் ஆயிரத்தில் ஒரு பங்கையேனும் உள்நாட்டு விவகாரங்களில் செலவிடுவதில்லை.

அவர் வளருகிறார்: ஆனால் இந்த நாடு வளரவில்லை!

—இந்த அபிப்பிராயம்தான் இப்போது மேலும் மேலும் வலுவடைகிறது.

நாட்டில் அவமதிப்பும்
நாணின்றி இழிசெல்வத்
தேட்டில் விருப்புங்கொண்டே!—கிளியே!
சிறுமை யடைவாரடி!

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்,
சிந்தை இரங்காரடி!—கிளியே!
செம்மை மறந்தாரடி!

பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத் தம் கண்ணாற்கண்டும்—கிளியே!
சோம்பிக் கிடப்பாரடி!

—பச்சைக் கிளியைப் பார்த்து பாரதியார் பாடிய இந்தக் கவிதை வரிகள்தான் மீண்டும் மீண்டும் நம் நினைவுக்கு வருகின்றன.

போகிறாள். ஆனால் பழிதீர்த்தான், உடன் ஓடி ஒளிந்து கொள்கிறான்.]

பொ: ஐயோ, இது என்ன? யார் அங்கே?

ஆள: கண்ணே, என்ன கண்டாய்? ஏன் பதறுகிறாய்?

பொ: கொள்ளிக் கண்கள் இரண்டு, நம்மை வெளிக் கதவின் வழியே விழுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

ஆள: காவலாளியின் நிழலாக இருக்கும். அன்பே, கவலையை விட்டு கனியமுதை ஊட்டு! உம், வா.

[ராணியோ, இன்னும், வெளிப்புறக் கதவைப் பார்த்துக் கொண்டே நிற்கிறாள்.]

பொ: நம் காதல் உலகில் யார் வந்து நமக்குத் துன்பம் தந்துவிட முடியும்? உலகத்தவர் அத்தனை பேரும், நம் காதல் பாதையின் குறுக்கே நடக்கட்டுமே—நம்மை தடுத்துவிட முடியுமா? சில மலர்கள், செடியிலே மலர்ந்து கிடக்கையிலே மணம் அதிகம் வீசுவதில்லை. கசக்கப்படும் பொழுதே அதிக மணம் தரும். காதலர் இருவரைக் கசக்கிப் பிழியட்டுமே, இந்த உலகம். அதில் தான் இனிமை யிருக்கிறது—அப்பொழுதுதான், அவ்விருவரும் இடைவிடாத காதலால் கட்டுண்டு களிப்புக் கடலில் மூழ்கித் திளைப்பர். காதல் கொண்ட வாழ்வே நான் அனுபவிக்கும் முழு வாழ்வு–இல்லையா அன்பரே?

ஆள: இன்பமே, உன் மென்னிடையசைய, காலிலே அணிந்துள்ள சிலம்பொலி கேட்க, ஆடு — நான் பாடுகிறேன்.

பொ: கண்ணாளா, பேசாதீர்கள் — ஐம்பொறிகளும் ஒரு பொறியாகி விட்டது! ஆசை அசையும் உதடுகளுக்குப் பூட்டிட்டு விட்டது!

ஆள: பூட்டிட்டு கிடக்கின்றனவா, உன் உதடுகள்? அப்படியானால், பூட்டுக்களை உடைத்து, விடுதலை வழங்க வேண்டும் கண்ணே — நீ என்னை விரும்புகிறாயா?

பொ: விந்தையான கேள்வியைக் கேட்கிறீர்களே — எனது விரோதியை நான் காதலிக்க முடியுமா?

ஆள: அந்த துன்மார்க்கன் யார்?

பொ: ஏன், அந்தத் துடுக்கன் நீங்களேதான்! அம்பால் என் இதயத்தைத் துளைத்து விட்டீர்கள்—கரும்பு வில்லிலிருந்து, தாங்கள் ஏவிய மலர் அம்பு வந்து தைக்கும் வரை, தனித்து, தவித்துக் கொண்டிருந்த என் ஏழை இதயம், இப்பொழுது கணையால் தாக்குண்டு கிடக்கிறது.

ஆள: அன்பே! 'அடியேன்' கதையும் அதுவேதான். என் இதயமும் புண்ணாகிக் கிடக்கிறது-புண்ணால் உயிர் போகும் நிலையில் கிடக்கிறேன் தேவி — மருத்துவ மாதே! புண்ணாற்றி என்னைக் காப்பதுன் பாரமம்மா!

பொ: என் உயிரே! என்னால் குணப்படுத்த முடியாது—ஏனெனில், மருத்துவம் பார்க்க வேண்டிய நானே அதே நோயால் அடிபட்டு அவதிப்பட்டுக் கிடக்கிறேன்.

ஆள: இந்த விசித்திர வியாதியைப் பற்றிய கதையை உலகத்திடம் கூறுவேன்.

பொ: நம் காதல் கதையை கவிதையாக்கிப் பாடுங்கள், நாதா!

ஆள: கண்ணே, அருகில் வா! அணைத்து ஒரு முத்தம் தா!

[அப்பொழுது வெளிப்புறக் கதவை யாரோ தட்டுகிறார்கள். ஆளவந்தான் துள்ளியெழுகிறான். கதவைத் திறக்கிறான். ஒரு வேலைக்காரன் ஒரு மூட்டையைச் சுமந்து வந்தான். அது, பட்டுத் துணியால் பதமாகக் கட்டப்பட்டிருந்தது. அவன் அதனைப் பிரிக்கப் போனான். அப்போது, அவன் அருகில் வந்த பொன்மேனியாள் பிடுங்கிக் கொண்டாள்.]

பொ: [உரக்கச் சிரித்தபடி] இந்தப் பரிசு உங்களை விரும்பும் ஒருத்தி அனுப்பிய தென்றே கருதுகிறேன். உங்களின் ஒரு சிறு பாகத்தைக்கூட வேறொருத்தி தொட அனுமதிக்க மாட்டேன். கஞ்சனைப் போல, தங்களை என் இதயப் பெட்டியிலடைத்துக் காக்கப் போகிறேன்!

ஆள: அன்பே, அதில் ஒன்றும் இல்லை.

பொ: இல்லை, நாதா! ஒரு பெண் அனுப்பிய பரிசுதான் இது.

ஆள: பிரித்தால் தெரிந்து விடுகிறது!

(பொன் மேனியாள் பிரிக்கிறாள். அதில் ஒரு கட்டாரி ஒளி விடுகிறது. இரண்டு பாயும் புலிகள் போன்ற கடைந்த பிடி போடப்பட்டிருக்கிறது. கோபமாகத் திரும்புகிறாள் ராணி.)

ஆள: (கட்டாரியைக் கையிலேந்தி) ஆ, வந்து விட்டதா?

பொன்: காதலா, தாங்கள் துரோகியா? கட்டாரி குறிக்கும் ரகசியம் என்ன? சொல்லி விடுங்கள்–சாளரத்தின் வழியே பார்க்கிறேன், கட்டாரி அனுப்பிய கள்ளன் யாரென்று! இரகசியம் அறியும்வரை எனக்கு இனி ஓய்வில்லை.

(ஆளவந்தான், வெறிகொண்டவன போல உரக்கச் சிரித்தபடி மாளிகைத் தாழ்வாரக் கைப்பிடிச் சுவர் பக்கம் ஓடினான்.)

ஆள: கொடுமை, கொடுமை இது! என் தந்தையின் கோர மரணத்தை அதற்குள்ளேயா மறந்து விட்டேன்? என் இதயத்தில் காதல் நினைவுகளை எப்படி நுழைய விட்டேன்? இதோ தோள்தட்டி நிற்கும் கொலைத் தொழிலையல்லவா நான் வரவேற்க வேண்டும்—காதலை, வெளியில் விரட்டியடிக்க வேண்டும்—ஆம், அப்படியேதான் செய்ய வேண்டும்! நான் உறுதி மொழியல்லவா தந்துள்ளேன்—விரதமல்லவா பூண்டுள்ளேன்! ஆம், இன்றிரவே—சந்தேக மில்லாமல் இன்றிரவே முடித்தாக வேண்டும்! இன்பக் கனவுகளே, காதல் நினைவுகளே, மகிழ்ச்சி நிகழ்ச்சிகளே, உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன் — இந்தக் கணம் முதல் என் மனதை விட்டு அகன்று விடுங்கள்! ஆமாம்; நான் பின் எப்படி இரத்தம் தோய்ந்த என் கரங்களால் அந்த மென் கரங்களை வருடி மகிழவோ, தொட்டு சுகங் காணவோ முடியும்? கொலை புரிந்து விட்ட கோர நிகழ்ச்சியைச் சொல்லத் துடிக்கும் உதடுகளால், கொஞ்சும் கிளியின் இதழ்களை எப்படித் தொட முடியும்? கொலைக் கொழுந்து விட்டெறியும் கண்களால், அக்கண்டை விழிகளின் அண்மையில் தான் செல்ல முடியும்—அவ் விழிகளின் ஒளி, என் கண்களைக் குருடாக்கி விடாதா? என் கண்களை இரவெல்லாம் சுற்றிச் சுற்றி, மயங்கிக் கிடக்கச் செய்யாதா? ஆம்; கொலை எனக்கும் என் இன்ப வல்லிக்கும் இடையிலே தடைச் சுவராக மாறி விட்டது—இனி அவளைத் தொட்டு முத்தமிட முடியாது—இதோ தடைச்சுவர் தெரிகிறது! கட்டாரி....வந்து விட்டது!

பொ: அன்பே!

ஆள: அப்படி என்னை அழைக்காதே! இனி உன் ஆயுளில் என் நினைவே எழாதபடி நடந்து கொள்.

பொ: (அவன் அருகில் சென்று) அன்பே உருவான காதலா!

ஆள: நம் இருவர் இடையிலும் ஒரு பெரு மதில் இருக்கிறது—நம் இருவராலும் அதைத் தாண்டிவர முடியாது.

பொ: அன்பா, நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம்—ஏழு கடலைத் தாண்டச் சொன்னாலும், தாண்டி வருவேன்!

[அவனோ அரசி என்றும் பாராது, அந்த அழகுத் திரு உருவின் அன்புப் பிணைப்பிலே அடைபட்டுக் கிடந்தான் 'இன்பம் இனி உங்களுக்கும் எனக்குமேதான்' என்று அவளும் அவன் இதயத்தில் தேனருவி பாய்க்கிறாள்! ஆனால் கண நேரத்தில் ஏன் இந்த திடீர் மாற்றம்? ஏக்கத்தின் பின் உச்சியிலே நின்று தவிக்கிறாள் ராணி — கடமை உணர்ந்த ஆளவந்தான் வெளியேத் துடிக்கிறான்.]

● தொடரும் ●

தேர்தல் நிதி திரட்டும் வாரம்

டிசம்பர் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள்வரை

கடமையைச் செய்யக் கிளைக் கழகங்களுக்கு

வேண்டுகோள்

நாடெங்கணும் அமைந்துள்ள தி. மு. கழகக் கிளைகள் அனைத்தும், 1956 டிசம்பர் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள்வரையிலும் உள்ள ஒருவார காலத்தைத் 'தேர்தல் நிதி திரட்டும் வாரமாக'க் கருதித் தேர்தல் நிதி திரட்டும் பணிகளில் தீவிரமாக ஈடுபடும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கிளைக் கழகங்களைச் சார்ந்த முக்கிய நிர்வாகிகளும், பிற முக்கிய தோழர்களும் கழகத் தோழர்களிடத்திலும், கழக ஆதரவாளர்களிடத்திலும், பொது மக்களிடத்திலும் நேரிடையாக அணுகித் தி. மு. கழகத்தின் தூய நோக்கத்தையும், தேர்தல் நிதியின் அவசியத்தையும் எடுத்துக் கூறி நன்கொடை வாங்கும் பணிகளில் சிறப்பாக ஈடுபட வேண்டுகிறோம்.

அந்த ஒருவார காலத்தில் திரட்டிடும் நிதியை நேரிடையாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

முகவரி: பொதுச் செயலாளர், தி. மு. கழகம், 'அறிவகம்', சென்னை—13.

'அறிவகம்'
சென்னை—13
28—11—56

இரா. நெடுஞ்செழியன்
—பொதுச்செயலாளர்.

பொழுதுபோக்கு

'டெமாஸ்தனிஸ்'

மூன்று மாதங்களுக்குள்ளே இரண்டு பெரும் இரயில் விபத்து!

மஹபூப் நகர் இரயில் விபத்தில் மாண்டோர் தொகை 130! அரியலூர் விபத்தில் மாண்டோர் தொகை 150! நிர்வாகத் திறமையில் வளர்ச்சி தானே!

மாங்கல்யம் இழந்து தவிக்கும் மங்கை நல்லோரும், சேய் பிரிந்து தவிக்கும் தாயும், தாயிழந்து புலம்பும் பிஞ்சுக் குழந்தைகளும், கரம் இழந்தோரும், கண்ணிழந்தோரும்—உயிர் இழந்தும் உலவும் பிணங்களாகி விட்டோர்—அப்பப்பா! நெஞ்சம் வெடிக்கிறது. நம் அனுதாபத்தை அவர்களுக்குக் காணிக்கையாக்குவது தவிர, வேறென்ன செய்ய இயலும்?

தன்னுடைய நிர்வாகத்தில் இரு பெரும் விபத்துக்கள், எண்பது நாட்களுக்குள்—இரு விபத்துக்களும் ஒரே மாதிரியான சூழ்நிலையில் ஏற்பட்டுள்ளன. ஏற்பட்டதைத் தடுக்க முடியா விட்டாலும், கடமை தவறியதை உணர்ந்து ஜனநாயகக் கொள்கைகளுக்கு மதிப்பளித்து ராஜிநாமாச் செய்த இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரியைப் பாராட்டுகிறோம்!

ஆனால்...மகபூப் நகர் விபத்துக்குப் பின், பாலங்களின் பலத்தை ஆராய்ந்து அறிவிக்க ஏற்படுத்தப்பட்ட குழுவின் முடிவு என்னாயிற்று?

குழு வேலையைத் தொடங்கவில்லையானால் தாமதத்திற்குக் காரணம் என்ன? ஒன்றுமில்லாத காரியங்களுக்கெல்லாம் பொதுமக்களின் பணத்தை விரயம் செய்து, ஓடோடியும் சென்று மாலை வாங்கிப் போட்டுக் கொள்ளும் மந்திரிகள், மக்களின் உயிர்ப் பிரச்சினையில் கவனம் செலுத்தாத காரணம் என்ன? பாலங்களைப் பழுது பார்க்க நினைப்பில்லாத இரயில்வே நிர்வாகம் பயனற்ற காரியங்களில்—வெறும் விளம்பரக் காரியங்களில் — ஓட்டு சேகரிக்கும் காரியங்களில் மட்டும் ஈடுபடுவது ஏன்? நாம் கேட்கவில்லை தோழர்களே! நாம் கேட்டால் பொறுப்பற்ற எதிர்க் கட்சி என்பார் காமராசர்; பழைய பிரிட்டிஷாரின் இரயில்வே நிர்வாகத்தைப் பாராட்ட இவர்களை இழித்தும் பழித்தும் கூறுவதாக மதிமந்திரி சுப்பிரமணியம் போகிற இடங்களிலெல்லாம் போலீஸ் பந்தோபஸ்தோடு நம்மை விளாசி விடுவார்! கேட்பது சுப்பிரமணியனார் "விபீஷணம்" செய்யும் இனத்தின் ஏடு! "ஆனந்த விகடன்" 2—12—55 இதழில், 'அரியலூர் அநியாயம்' என்ற தலையங்கத்தில் 'ஆனந்த விகடன்' எழுதுகிறது.

"இவ்வளவுக்கும் அரியலூர் பக்கத்தில் உடைப்பு ஏற்படும் என்று ஒரு தாசில்தார் எச்சரித்ததாகவும் கூறப்படுகிறது இந்த எச்சரிக்கை கவனிக்கப்பட்டதா! அல்லது மகபூப்நகரில், அந்தத் தொழிலாளர் தலைவர் எச்சரிக்கை அலட்சியம் செய்யப் பட்டதுபோல் இங்கும் அலட்சியம் செய்யப்பட்டு விட்டதா?"

இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு 'ஆனந்த விகடன்' ஆத்திரத்தோடு மேலும் எழுதுகிறது:

"இம்மாதிரி மக்களின் உயிரைப் பாதுகாக்கும் அடிப்படை விஷயங்களில் அக்கறை செலுத்தாமல் அடிக்கடி 'ஸீட்'டை வெட்டுவதும், படுக்கையை வெட்டுவதும், வகுப்பை மாற்றுவதும, பெயரை மாற்றுவதும், ஆளை மாற்றுவதும், வண்டிக்கு வர்ணம் பூசுவதும், வாரத்துக்கு ஒரு முறை எந்த மந்திரி வந்தாலும் ஸ்டேஷனுக்கு வெள்ளை அடிப்பதும், எந்த ஸ்டேஷனை 'ஏர் கண்டிஷன' செய்யலாம் என்று யோசனை செய்வதுமாகத்தான் இன்றைய இரயில்வே நிர்வாகம் போய்க் கொண்டிருக்கிறது."

இப்படி நிர்வாக ஊழலைப் படம் பிடித்துக் காட்டிடும் விகடன், நிர்வாகத்தை ஆட்டிப் படைக்கும் கட்சியின் உள் நோக்கத்தையும், கோடி காட்டி எழுதுகிறது.

"இம்மாதிரி விளம்பரங்களெல்லாம் ஜனங்களின் ஓட்டுறவுக்காக அல்ல; ஓட்டுறவுக் காகத்தானோ என்று மக்கள் சந்தேகப்படும் அளவுக்கு ஆடம்பரம் மீறி விட்டது."

மக்களின் உயிர்மீது காட்டும் அக்கறையைவிட ஓட்டு வேட்டையில் ஆளும் கட்சி அதிக அக்கறை காட்டுகிறது—என்று நாசூக்காகக் குற்றம் சாட்டுகிறது 'ஆனந்தவிகடன்' இந்த லட்சணத்தில்தான், அமைச்சர் போகின்ற இடங்களிலெல்லாம் எதிர்க் கட்சிகளைப் பொறுப்பற்றவர்கள்; இவர்கள் ஆட்சிபீடம் ஏறிவிட்டால் 'சர்வ நாசம்'—என்று ஒப்பாரி வைக்கிறார்.

*

இன்னொரு விஷயம்; நிதியமைச்சர் (மதி யமைச்சருங் கூட!?) கொஞ்ச நாளைக்கு முன் எங்கள் ஊருக்கு வந்து திருவாய் மலர்ந்தருளினார்; வழக்கம்போல் அண்ணாவின் 'ரோமாபுரி ராணி'களைக் கேலி பேசிய பின், அண்ணா அவர்கள் 'இரவு ராணி' என்றொரு நூல் எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டார்; என்ன அறிவு! என்ன ஆராய்ச்சி! அண்ணா 'இரவு ராணி' எப்பொழுது எழுதினார்? எந்தப் பத்திரிகையில் எழுதினார்? வெளியிட்டவர் யார்?... பாவம், தேர்தல் ஜுரம் - மந்திரியார் பிதற்ற ஆரம்பித்திருக்கிறார்! கனம் அமைச்சர் 'தினத்தந்தி' ரசிகரோ என்னவோ, அவருக்கு 'இரவு ராணி' கற்பனையில் உதயமாகி இருக்கிறது.

போகுமிடமெல்லாம் 'ரோமாபுரிராணிகளை' எண்ணி ஏங்கும் நிதி அமைச்சருக்கு அறிஞர் அண்ணாவின் கீழ்க்கண்ட நூல்களை சிபாரிசு செய்கிறேன்,

பணத்தோட்டம்
ஆரிய மாயை
இலட்சிய வரலாறு

முதல் நூல், பொருளாதாரத் துறையில் நம் நிலை என்ன என்பதை மந்திரி புரிந்து கொள்ளத் துணை செய்யும்.

இரண்டாவது நூல், அவர் சிக்கித் திணறும் 'மாம்பல மாயையை' அவருக்கு உணர்த்தும்.

மூன்றாவது நூல், நம் லட்சியம் வளர்ந்த கதையை, அவர் புரிந்து கொள்ள விரும்பினால் அதை அவருக்கு விளக்கும்.

எதிர்க் கட்சிகளைப் புரிந்து கொள்ளும் எண்ணம் இவர்களுக்கு எப்பொழுது இருந்தது? இருந்தால்தான் ஜனநாயகம் இங்கே மலர்ந்து விடுமே!

நேரு பிரதமராயிருப்பதால் தான் ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகள், நமக்குப் பண உதவி புரிகிறதாம்! இதுவும் நிதியமைச்சரின் 'கொலம்பஸ் வேலை'களில் ஒன்று!

அரசியல் அரிச்சுவடி தெரிந்தவன் கூட இப்படிக் கூற மாட்டானே! அப்படியானால் நேருவுக்குப் பின் இந்த நாட்டின் கதி என்ன? நேரு போன பின் ரஷ்யாவும், அமெரிக்காவும் கொடுத்த உதவியை உடனே 'வாபஸ்' வாங்கி விடுவார்களா? அந்த நிலையில்தான் ஒரு நாட்டை வைத்திருக்கலாமா? தேர்தலில் மக்களை ஏமாற்றி ஓட்டுப் பெறும் எண்ணத்தில் எதை வேண்டுமானாலும் பொறுப்பற்ற முறையில் ஒரு நிதியமைச்சர் பேசலாமா? அட, பாரதமே!

"அண்ணாதுரை கேட்கிறபடி இரண்டாயிரம் கோடி நமக்குக் கிடைத்தாலும், அவ்வளவு பெரிய தொகையை செலவழிக்க இங்கே (தமிழ் நாட்டில்) என்ன இருக்கிறது?"—சென்னை மாநிலத்தின் நிதியமைச்சர் கேட்கிறார் தோழர்களே! பணம் கொடுத்தாலும் அதை செலவழிக்க நாட்டில் திட்டம் இல்லை என்று சொன்ன முதல் நிதியமைச்சர் இவர்தான்!

டெல்லி கொடுத்தாலும், செலவழிக்கத் திட்டமில்லை என்று கூறிடும் பொருளாதார நிபுணரான (?) நிதியமைச்சர் நமக்கிருக்கும் வரையில், நாம் வளர முடியாது; வாழ முடியாது!

முன்னேற்றக் கழகம் சுட்டிக் காட்டும் வடநாடு—தென்னாடு பேதத்தை மறைக்க முடியாத 'கனம்'கள், பொருளாதாரத்திற்குப் புது வியாக்கியானம் செய்கிறார்கள். அடுத்த தலைமுறைக்கு நாட்டைத் தயார் செய்யும், ராஜதந்திரிகளிடம் நாடு ஒப்படைக்கப்படவில்லை; மூன்றாந்தர அரசியல்வாதிகளிடம் சிக்கிச் சீரழிகிறது!

O

விற்பனைக்குத் தயார்!

1957 திராவிடர் நாட்குறிப்பு(டயரி)

தி. மு. கழக முழு விவரங்கள், 1,200 தி. மு. க. கிளைகளின் விவரங்கள், பேச்சாளர் முகவரிகள், அஞ்சலகச் செய்திகள், விற்பனை வரி, வருமானவரி, பதிவுக் கட்டணங்கள், பக்கத்துக்கு ஒன்று வீதம் அறிஞர்களின் 365 பொன்னுரைகள், இன்னும் பலவித குறிப்புகளும் விவரங்களும் அடங்கியது.

காலிகோ பைண்டு — உதய சூரியன் முகப்பு.

ஒன்றின் விலை ரூ. 1. செலவு தனி

விற்பனையாளர் கழிவு 20 சதவீதம்,
முன்பணத்துடன் ஆர்டர் உடனே அனுப்பவும்.

குறிப்பு; ஏராளமான புதுவித பொங்கல் வாழ்த்துக்கள் தயாராகி உள்ளன. எங்கள் பகுத்தறிவுப் பாசறையில் தி. மு. க. அறிஞர்கள் எழுதிய எல்லா விதமான புத்தகங்களும் இலக்கியங்களும் கதை- கட்டுரை- கவிதைகளும் திருமண பரிசுக்கும் பள்ளிகளின் லைப்ரரிகளுக்கும் தேவையான புத்தகங்களும் கிடைக்கும்.

'போர்வாள்' அலுவலகம்,
128. பிராட்வே, சென்னை—1.

விசைத்தறி திணிக்கும் விசித்திரப் பிறவிகள்!

❊ 2-ம் பக்கத் தொடர்ச்சி

—என்று கூறுவதைப் போல; நாளை தேவை உருவாகும் என்பதற்கு இன்று தரித்திரத்துக்கு வித்திடுகின்றனர், தேசிய வீரர்கள்!

—இவர்கள் எதைக் குறிப்பிட்டு எது நடந்திருக்கிறது, இதுவரை இந்த நாட்டில்?

உணவு உற்பத்தியைப் பொருத்த வரையிலே இந்தியா தனது சுய தேவையை அடைந்துவிட்டது என்று கூறினார்கள்!

ஏருத மேடையெல்லாம் எக்காளம் ஊதி பிரச்சாரம் செய்தார்கள்!

ஆனால் நடந்தது என்ன?

உணவுப் பொருள்களின் விலை அனைத்தும் விஷம்போல ஏறிக்கொண்டே வருகிறது.

நியாய விலைக் கடைகளிலே பொது மக்கள் இரவும் பகலுமாக அரிசி பெறுவதற்கு அணிவகுத்து நிற்பதைத்தான் காணுகிறோம்!

—இதுவா சுய தேவைப் பூர்த்தியின் அடையாளம்? இதுவா அவர்கள் பேசிய பேச்சின் பலாபலன்?

—இன்று அதே அமைச்சர்கள் அலறுகிறார்கள்:

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் துணிகளுக்கான தேவை உயர்ந்துவிடும்; அதை ஈடு செய்ய வேண்டுமானால் இப்போது விசைத் தறிக்குப் பூரண ஆதரவு தரவேண்டும்—என்று!

பழமொழி ஒன்று சொல்லுவார்கள்—கூறை ஏறிக் குருவி பிடிக்கத் தெரியாத குருக்களா, நாளை வானத்தைக் கிறி வழி காட்டப்போகிறான்? என்று!

இன்று அதே பழமொழியைத்தான் நெசவாளித் தோழர்கள், விசைத் தறியை நுழைக்கப்பார்க்கும் விசித்திரப் பிறவிகளைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

"உணவு விஷயத்திலே சுய தேவைப் பூர்த்தி என்று பேசினீர்கள். இன்று அத்தனையும் வெளி வேஷமாகிவிட்டது. நிலைமை இவ்வாறிருக்கும் போது: நீங்கள் ஆதி முதல் கூறி வருவதும்; கணக்கிடுவதும்; தவறானது என்று காலப் போக்கால் நிரூபிக்கப்பட்டு வரும்போது; நாளை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் துணிகளுக்கான தேவை உயரும் என்பதை நாங்கள் எவ்விதம் நம்பமுடியும்?"

—கேட்கிறார்கள் இப்படி, கேடு தங்களை நோக்கி முடுக்கி விடப்படுவதை யுணர்ந்த நெசவாளித் தோழர்கள்!

அவர்கள் மட்டுமா?

காங்கிரஸ்காரர்களுள்ளாகவே இந்த ஐயப்பாடு இன்று பலமாகத் தோன்றியிருக்கிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காமராசரின் கைப்பாவை!

அந்தத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியே விசைத் தறி இந்த உப கண்டத்திலே திணிக்கப்படுவதை எதிர்த்து தீர்மானமே நிறைவேற்றியிருக்கிறது!

இவையனைத்திற்கும் பிறகுதான் காமராசர் கோவையிலே கூறியிருக்கிறார்:

"விசைத் தறித் திணிப்பைத் தென்னாட்டு நெசவாளிகள் எதிர்க்கிறார்கள் என்பதற்காக இந்திய அரசாங்கம் விசைத்தறி வாங்குவதை நிறுத்திக் கொள்ளாது" என்று!

தென்னகத்து நெசவாளிகள் எதிர்க்கிறார்களாம்!

இருந்தாலும் அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாது இந்திய அரசாங்கம் விசைத் தறியை வாங்கியே தீருமாம்!

—வெட்கமில்லாமல் கூறுகிறார், காமராசர்!

அவர் இருப்பதோ ஜனநாயக நாடு—பெருவாரியானவர்களின் கொள்கை மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்கு மதிப்பு வைக்கும் நாடு!

இருந்தும் தென்னகத்து நெசவாளிகள் அனைவரும் எதிர்த்தபோதிலும் அந்தப் பெருவாரியானவர்களின் எதிர்ப்பு கவனிக்கப் படாதாம்! துச்சமென மதிக்கப்படுமாம்!

வேதனை! வேதனை!!

இதனைவிட வெட்கப்படும்படியான செயல் வேறு என்ன நடக்கமுடியும் இந்த நாட்டில்?

மக்கள் சக்தி மண்ணில் நெளியும் புழுவாக மதிக்கப்படுகிறது.

பொதுமக்கள் புல்லென்று கருதப்படுகிறார்கள்.

யாருடைய நன்மைக்காக என்று செய்கிறார்களோ அந்த நெசவாளிகளே எதிர்க்கும் போது இவர்களோ அதைத் திணிக்கப் பார்க்கின்றனர்!

அய்யா, காமராசரே! தென்னாட்டுக்காரர்கள் எதிர்த்து எதை வடநாட்டுக்காரர்கள் செய்யாமலிருந்தார்கள்? அல்லது செய்ததை 'வாபஸ்' பெற்றார்கள்?

எதிர்த்தால் மட்டும் போதாது காமராசரே; எதிர்த்துப் போராட்டமும் தொடங்க வேண்டும்!

போராட்டத்துக்குத்தான் இவர்கள் அசைந்து கொடுக்கக் கூடியவர்கள்.

விசைத் தறித் திணிப்பினால் தென்னகத்தில் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்படுமானால் இங்குள்ள நெசவாளித் தோழர்கள் தாங்கள் வயிற்றிலே அடிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு வெறும் எதிர்ப்பு காட்டுவதோடு இருந்துவிட மாட்டார்கள்; எலியாக வாழ்பவர்கள் புலியாக மாறி போராட்டம் தொடங்கவும் தயங்கமாட்டார்கள் என்பதைத்தான் இந்தத் தருணத்தில் காமராசருக்கு உணர்த்த வேண்டியவர்களாயிருக்கிறோம்! ●

'முரசொலி'

இலங்கை,
உள் நாடு

ஆண்டு சந்தா 6-0-0
6-மாத சந்தா 3-8-0

திருமதி விசாலாட்சி மறைவு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களில் ஒருவரும், கடலூர் பிரபல வழக்கறிஞருமான தோழர் இரெ. இளம்வழுதி அவர்களது துணைவியார் திருமதி விசாலாட்சி அவர்கள் கடந்த சில நாட்களாகப் பிரசவத்திற்குப் பின்னர் நோய்வாய்ப்பட்டிருந்து, நேற்று அகால மரணமடைந்தார் என்ற செய்தி அறிந்து திடுக்கிட்டோம்.

பொதுப்பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் நண்பர் இளம்வழுதி அவர்களுக்கு உற்ற துணைவராய் இருந்து அவரை ஊக்குவித்துக் கொண்டிருந்த அவரது துணைவியாரின் மறைவு அவருக்கு ஈடுசெய்ய முடியாத கஷ்டமாகும்.

தோழர் இளம்வழுதி அவர்களுக்கும், அவரது குழந்தைகளுக்கும், உற்றாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை உரித்தாகுகிறோம்.

(ஆ-ர்.)

தயாராகிவிட்டன!

கவின்மிகு கருத்துப் பெட்டகங்கள்!

மு. கருணாநிதி எழுதிய

வெள்ளிக்கிழமை

விலை ரூ. 2--0--0

உணர்ச்சிக் காவியம்! ஒப்பற்ற நவீனம்!

★

மாறன், எம். ஏ. எழுதிய

'வால் நட்சத்திரம்'

விலை ரூ. 1--0--0

சிந்தனைக் கருவூலங்கள்! சிறப்புமிகு முத்துக்கள்!

★

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி

தண்டனை!

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்.

இந்தக் குறளுக்கு என்ன அண்ணா பொருள்?—என்று கேட்டுக் கொண்டே வந்தது தங்கை கற்பகம். ஆசிரியர் அண்ணாவோ வழக்கமான பீடிகையோடு எதுவோ சொல்ல ஆரம்பித்தார். கதை சொல்லி—குறளின் பொருள் சொல்லுபவராயிற்றே அவர்—அன்று தங்கைக்கு சுவையான செவிக்கு உணவு—அதாவது அருமையான கதை ஒன்று கிடைத்தது.

தவறு செய்யப்படும்போது யோசனைக்கு இடமே இருப்பதில்லை. ஆனால் அதன் விளைவு பயங்கரமாகும்போது தான் குற்றம் புரிந்த நெஞ்சு குமுறி யழுகிறது. அதுவும் தகமையாளர்கள் தண்டனை தராமல், நல்லன செய்து விடும்போதோ...? வேதனை எல்லை மீறி வெந்து புலம்புகிறான், குற்றம் புரிந்து—பின் தன் தவறுணர்ந்தவன்.

அதோ, உற்றுக் கேளுங்கள், அதைப் போலத்தான் ஒரு அழு குரல்—விக்கி விக்கி அழும் வேதனைக் குரல் எழும்புகிறது! ஐயோ பாவம், அழுவது யார்? குரல் வரும் திசையைத்தான் நோக்குவோமே! அங்கே ஒரு வண்ண மாளிகை — அதனுள் ஒரு அழகான அறை—உள்ளே ஒரு பட்டு மெத்தை—அதிலே குப்புற விழுந்து கிடக்கிறான் ஒரு தம்பி! அவன்தான் அழுகிறான். விம்மி விம்மி அழுகிறான்! நேரமோ மாலை—விளையாடும் வேளை—அந்த நேரத்தில் சிரித்துக் களிக்க வேண்டிய அந்த சின்னத் தம்பி அழுவானேன்?

அன்பன்—அதுதான் அவனது பெயர் — நல்ல தம்பிதான் — மிக மிக புத்திசாலிதான்— ஆனால்...

சுவையான பாலிலே ஒரு துளி விஷம் கலந்தால்...பால் இனிக்கவா செய்யும்?

அதைப் போலத்தான் அந்த நல்ல தம்பியின் மனதில் ஒரு துளி விஷம் அல்ல; பல துளிகள் விஷம் கலந்து விட்டது. அவனுக்குக் கெட்ட நண்பர்களின் தொடர்பு ஏற்பட்டு விட்டது.

அப்புறம், அன்பனின் நல்ல குணங்கள் மாறுவதற்கு எத்தனை நாட்கள் பிடிக்கும்? அழகன் முதலில் பயந்தான்; நடுங்கினான். ஆனால் நண்பர்களின் பாசாங்கு மொழிகள் அவனது பயத்தை துரத்தியது. பாழும் எண்ணத்தைப் புகுத்தியது. அவனது செயல்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாறின. அதன் முடிவு...?

'பொய்' என்பதையே என்னவென்று அறியாத அன்பன் அப்பாவிடமும் அம்மாவிடமும் அபாண்டங்களாகப் புளுகினான். புத்தகத்திற் கென்று காசு கேட்பான்; பள்ளிக் கென்று பணம் கேட்பான்; அந்தப் பணத்தைக் கண்டபடி செலவு செய்வான்.

பள்ளிக்கூடம்—அதை விட்டால் வீடு என்று பழகியிருந்த அவன், சில நாட்கள் பள்ளிக்கும் செல்லமாட்டான். நண்பர்களுடன் ஊர் சுற்றுவான், மரம் ஏறுவான். மாங்காய் பறிப்பான். "ஆகா, அன்பனல்லவா நண்பன்?" என்பார்கள் நண்பர்கள். அவ்வளவுதான்; அன்பனுக்கு உச்சி குளிர்ந்துவிடும்; அன்று எப்படியும் ஐந்து ரூபாய் அவர்கள் விருந்துக்குக் கிடைத்துவிடும்.

இப்படி இருக்கையில் ஒரு நாள்....

அன்று ஊரிலே புதிதாக சர்க்கஸ் வந்திருந்தது. அன்றே அதைப் பார்த்து விட வேண்டும்—இப்படி முடிவு செய்தார்கள் அன்பனின் நண்பர்கள். அதுதானே அவர்களது வழக்கம்? ஆனால்...அன்று அன்பனின் கையிலே பணமில்லை. அவனுக்கு என்ன செய்வதென்றும் புரியவில்லை.

அன்பன் வீட்டிற்கு வந்தான். வீட்டினுள் நுழைந்ததும் கண்களில் சுவரில் மாட்டியிருந்த அப்பாவின் சட்டை தெரிந்தது. அவன் மனதில் கண நேரத்தில் ஒரு குருட்டு எண்ணம் தோன்றியது. சட்டையை நோக்கி நடந்தான். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான். சட்டைப் பைக்குள் கையை விட்டான். அவன் கைகள் நடுங்கின; ஆனால் பையில் காலணாகூடத் தென்படவில்லை. பதிலாக அப்பாவின் பேனா தான் தட்டுப்பட்டது.

அன்பன் பேனாவைக் 'கப்' பென்று வெளியில் எடுத்தான். அது மிக மிக விலையுயர்ந்த பேனா — நூறு ரூபாய் செலவழித்து வரவழைத்த 'பார்க்கர் பேனா'. அன்பன் அதையெல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை. பேனாவை தன் சட்டைக்குள் மறைத்துக் கொண்டான். விடுவிடு வென்று நடந்தான். வீட்டை விட்டு வெளியே வந்தான். அவன் உடல் படபடத்தது.

வாசலில் தயாராகக் காத்து நின்ற நண்பர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். கையிலிருந்த பேனாவையும் பார்த்து விட்டார்கள். அப்புறமென்ன? திட்டம் தீட்டிவிட்டார்கள்.

திட்டப்படி எல்லாம் நடந்தன. நூறு ரூபாய் பேனாவை பத்து ரூபாய்க்கு விற்றான் ஒரு நண்பன். எல்லோரும் பள்ளிக்கூடத்தை மறந்தார்கள். சர்க்கஸ் கொட்டகைக்குள் நுழைந்தார்கள்.

●

ஆனால் கொட்டகையை விட்டு வெளியே வந்தபோது அன்பனின் நெஞ்சில் மீண்டும் பயம் தோன்றியது. நண்பர்களும் விட்டுப் பிரிந்தார்கள். அன்பன் வீடு நோக்கி மெதுவாக நடந்தான்.

"ஐயோ! அப்பா வந்திருப்பாரே! பேனாவைத் தேடியிருப்பாரே! வீட்டில் அடியெடுத்து வைத்தவுடன் கேட்பாரே! என்ன செய்வது?" என்று எண்ணினான். கால்கள் நடக்க மறுத்தன.

வீடு நெருங்கிக் கொண்டிருந்தது. பயமும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

வீட்டிற்குள் நுழைந்தான். முதல் முதலாக அவனது கண்கள் சட்டை மாட்டியிருந்த இடத்தைக் கவனித்தன. ஆனால் ...அந்த இடம் காலி! சட்டையைக் காணோம்! 'ஐயையோ!... அப்பா வந்துவிட்டாரே' என்று திடுக்கிட்டான். மறுகணம் அவன் உடல் வியர்த்தது நடுங்கியது. அடிமேல் அடியெடுத்து வைத்தான். பூனை போல நடந்தான்.

"அன்பா!"—அந்த சமயத்தில் இப்படி எழும்பியது அப்பாவின் கோபக் குரல். அவன் திடுக்கிட்டான். அவன் எதிர்பார்த்தது நடந்தே விட்டது. என்ன செய்வது என்றே புரியவில்லை. பேசாமல் நின்றான்.

"அன்பா! உன்னைத்தான்..... என் அறைக்குள் வா!"—அப்பாவின் அதட்டல் குரல் மீண்டும் கேட்டது. அன்பன் நடந்தான். இல்லை; 'இல்லை. காற்று தான் அவனைத் தள்ளிக் கொண்டு சென்றது. அறைக்குள் சென்றான். அப்பா நின்று கொண்டிருந்தார். அவனைப் பார்த்தார். பயத்தால் வெளிறிக் கிடந்த முகத்தை உற்றுப் பார்த்தார். பேசினார்:

"அன்பா! உண்மையைச் சொல். என் பேனாவை எடுத்தாயா...?"

கேள்வியைக் கேட்டதும் அன்பன் திடுக்கிட்டான்; அவன் கால்கள் படபடவென்று நடுங்கின. "எடுத்தாயா?...சொல். எங்கே பேனா?" — மீண்டும் அதட்டினார்.

அன்பன் தடுமாறினான்; தத்தளித்தான். "பேனாவை...ஆமாம் ...பேனாவை......நான் எடுக்கவில்லை. இல்லை...எடுத்தேன்..." என்று உளறினான். 'ஐயோ! அப்பாவுக்கு உண்மை தெரிந்து விட்டது. இனி தப்ப முடியாது. தப்பவே முடியாது. அடியும் உதையும், அதைவிட அவமானமும் என்னை வதைக்கப் போகிறதே!' என்று முடிவு கட்டி விட்டான்.

ஆனால்...

எதிர்பார்த்தது நடக்கவில்லை. அப்பா தனது மேஜை டிராயரைத் திறந்தார். எதையோ எடுத்தார். அன்பன் அதை கவனித்தான். மறுகணம் 'ஆ...' என்று ஆச்சரியத்தால் கூவினான். அவன் கண்கள் இருண்டன. உலகம் சுழல்வதுபோல் மயங்கினான். ஏன் தெரியுமா? அப்பாவின் கையிலே இருந்தது அவன் திருடி விற்ற பார்க்கர் பேனாதான்!

அவனது நடுக்கத்தினைக் கண்ட அப்பா, "ஏன் பயப்படுகிறாய்?.........பார்த்தாயா பேனாவை.........? இது என்னிடம் எப்படி வந்தது?...பையில் பேனாவை வைத்திருந்தால் பத்திரம் வேண்டாமா? எவனோ உன் பையிலிருந்து திருடி என் நண்பர் ஒருவரிடம் விற்றிருக்கிறான். நான் அவரை சந்தித்தேன். உண்மையைச் சொல்லி வாங்கி வந்தேன்...சரி சரி, இனி மேலாவது கவனமாயிரு....இதோ பேனா..." என்று நீட்டினார். அன்பன் வாங்கிக் கொண்டான். அப்பா 'டக்' கென்று வெளியே சென்றார்.

அதே சமயம், அழகனின் பதட்டம் குறைந்தது. பயம் மறைந்தது. நடுக்கம் ஓடி ஒளிந்தது. ஆனால், 'குபீர்' என்று பொங்கி வந்தது அழுகை! அழுகையை அடக்க முயன்றான். ஆனால் ... முடியவே யில்லை. அன்பன் நிற்கவும் சக்தி இழந்தான். படுக்கையில் சாய்ந்தான். அழுதான்; அழுது கொண்டே இருந்தான்! இன்னும் அழுது கொண்டே இருககிறான்!

●

"அதிருக்கட்டும் அண்ணா! அவன் தான் குற்றம் புரிந்தான்; 'இன்னா' செய்தான். அவனது தந்தை செய்த 'நன்னயம்' என்ன?"—வழக்கமான சந்தேகத்தை வெளியிட்டது தங்கை.

"சொல்லுகிறேன், சொல்லுகிறேன்...அன்பனோ அழுகிறான்; ஆனால் அந்த அழுகைக்குக் காரணமான அப்பாவோ என்ன நினைத்தார் தெரியுமா?...

"பைத்தியக்காரன்! நன்றாக அழட்டும்!...இனியாவது தவறு செய்ய மாட்டானல்லவா! என் பேனாவை என்னிடமே கொண்டு வந்து விற்றார்களே; அதற்காக நான் அவனை அடித்திருந்தால் உடற் காயம்தான் ஏற்படும்! ஆனால் நான் நடித்த நாடகமோ—அவன் நெஞ்சில் அழியாத நற் பண்புகளைத் தோற்றுவித்து விட்டது!—ஆமாம்; என் அன்பு மகன் திருந்திவிட்டான்!" ●

கடைசிப் பக்கம்

ப. நாராயணசாமி;
திம்மப்பாளையம்.

(?) பிள்ளைக் கறியைச் சமைத்தவர் சிறுத் தொண்டர்: பிணக் கறியைச் சமைத்தவர்...?

வேறு யாருமல்ல; விருதுநகரில் சங்கரலிங்கனாரைக் கொன்ற ஏகபாரதத் தொண்டர் காமராசர் தான்!

வி. கோதண்டராமன்;
சென்னை 1.

(?) பிறருக்கு உழைப்பவர்கள் யார்? ....

காமராசருக்கு உழைப்பவர்கள் தங்களை அப்படித்தான் கூறிக் கொள்கின்றனர்!

சோமசுந்தரம்; குடந்தை.

(?) வசை புராணத்தை எங்கே காணலாம்?

மாயவரம் தி. க. மாநாட்டிற்கு நீர் போகவில்லையா?

ஆர். நாகலிங்கம், காரைக்குடி.

(?) கொள்கையளவில் நேருக்கு நேர் பதில் கூறமுடியாதவர்கள் என்ன செய்வார்கள்?

'ஜன சக்தி' பத்திரிகை நடத்துவார்கள்!

எஸ். மார்க்கண்டேயன்;
திருவையாறு.

(?) தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் 'அண்டை' கட்டுமா?

ஹங்கேரியில் குழப்பம் வந்தால் இங்குள்ள கம்யூனிஸ்ட்டுகளுக்கும் குழப்பம் வந்து விட்டதே! அதனால் அவர்களைப் பொறுத்த வரையில் இது சரியே!

வி. கே. கே. மணியம்; உறையூர்.

(?) பஞ்சசீலத்தில் கையெழுத்துப்போட்ட புல்கானின் அதை எந்த அளவுக்கு மதிக்கிறார்?

மதிக்கவில்லை சோழரே! மிதிக்கிறார், ஹங்கேரியில்!

அப்பன்ராஜ்; பொள்ளாச்சி.

(?) மாயவரத்தில் நடந்த தி. க. மாநாட்டின் தீர்மானம் என்ன?

நாடெங்கும் நடைபெற இருக்கும் கூட்டங்களில் 'திருச்சி' நடத்தி தோல்வி அடைவது என்பது தான் அதில நிறைவேற்றப் பட்ட புரட்சிகரமான தீர்மானம்!

வி. சடகோபன்; குறிஞ்சிப்பாடி.

(?) சாக்கடையில் கல் எறிந்தால்?

இதை தி. மு. சழகம் உணர்ந்திருப்பதாலதான் பலர் இப்போது தங்களை எதிர்பார்ப்பதில்லை என்று நிமிர்ந்திருக்கின்றனர்.

டி. டி. பெருமாள; அரிசிபாளையம்

(?) ஹங்கேரிக் கிளர்ச்சிபற்றி இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் என்ன கொள்கை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்?

அந்தக் கிளர்ச்சி வெளிநாட்டு (அமெரிகக) ஏகாதிபத்தியத்தால் தூண்டிவிடப்பட்டது என்று முனபு ரஷ்யாவிலிருந்து வந்த செய்தியையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!

விஜயரங்கம்; மாயூரம்.

(?) அரியலூர் விபத்து காரணமாக யாருக்கு அதிக நஷ்டம்?

இராமேஸ்வரம் தேவ ஸ்தானத்திற்குத்தான்! அங்கு சென்று மூழ்கி ஆண்டவனைத் தரிசிப்பதற்காகச் சென்ற வடநாட்டு யாத்திரிகர் கோஷ்டி கூண்டோடு சுடுகாட்டுக்குப் போய் விட்டதே! அதனாலதான் எல்லோரும் இராமேஸ்வரம் செல்லுவதற்கே பயப்படுகிறார்களாம!

"வெள்ளி வீதி"

டிசம்பர் 10-ம் தேதி இதழ்!

மு. கருணாநிதி எழுதும்

"என்னைப்பற்றி..."

தொடர் கட்டுரையுடன்

நட்சத்திர வீடு---

சினிமா எழுத்தாளர் ஆவதெப்படி?

இன்னும் பல புதிய பகுதிகள்!

வெள்ளி வீதி — சென்னை-6.

தயாராகிறது தமிழ் விருந்து!

இது ஒரு அரசியல் சுவடி
இது ஒரு இலக்கியப் பேழை
இது ஒரு கலைப் பெட்டகம்

—என்று நீங்கள் எல்லோரும் போற்றிப் புகழும்

'முரசொலி' அளிக்கும்

பொங்கல் மலர்-1957

★ நீங்கள் விரும்பும் எல்லாம் இருக்கும்; எல்லோரும் எழுதுவர்!

★ உங்கள் கண்கள் களிக்க பல வண்ணப் படங்கள்!

★ உங்கள் கருத்து மகிழ பல்சுவை எழுத்துக்கள்!

—இவை அனைத்தும் கொண்டு உங்கள் அகம் குளிர; சிந்தை சுகம் பெற; தேமதுரத் தீந்தமிழ்க் காவியங்கள் பல கொண்டு வர இருக்கிறது

பொங்கல் மலர்

★ "விலை மூன்று ரூபாய்தானா? பரவாயில்லை. முரசொலி என்றுமே மலர் வெளியிட்டு எங்களை ஏமாற்றியதில்லை. அதனால் எவ்வளவும் தருவோம்" என்று எழுதியிருக்கின்றனர், நம் தோழர்கள்!

★ "மூன்று ரூபாய் விலை அதிகமாயிற்றே! இந்த ஆண்டின் அரும் பெரும் இலக்கியப் பேரிதழ் எங்களால் வாங்க முடியாமல் போய் விடுமே; தயவு செய்து விலையைக் குறையுங்கள்" என்று அன்புக் கட்டளை பிறப்பித்திருக்கின்றனர் பலர்; பொருளாதாரம் தடை செய்வது காரணமாக!

எனவே இந்தப் பலரின் வேண்டுகோளுக் கிணங்க முரசொலி இந்த ஆண்டும் தனது விலையை இரண்டு ரூபாயாக நிர்ணயித்திருக்கிறது!

அதனால்;

★ அன்புசால் தோழர்களே! ஆனிப்பொன் ஏடாம் அழகுப் பொங்கல் மலர் பெற்றிட இன்றே தயாராகிடுங்கள்!

★ இப்போதே உங்களூர் விற்பனையாளரிடம் சென்று; மலர் ஒன்று தேவை எனக் கூறிடுங்கள்!

நினைவிருக்கட்டும்:

★ 'முரசொலி' படைக்கும் பெருமலராம் அரசியல் இலக்கிய கலைப் பொங்கலின் விலை

இரண்டே ரூபாய்தான்!

விற்பனையாளர்கள் பதிவு செய்து கொள்ள முந்துங்கள்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ரோடு சென்னை-6, தமிழ்நாடு.